


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 659 கோடியே 96 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1046 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் 116 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 464 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 15 கோடியே 81 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 25 ”கலங்கரை ஒருங்கிணைந்த போதை மீட்பு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகான ந்தம். , உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், , மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.2.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ஆதரவற்ற மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலன் காக்கும் தமிழ்நாடு அரசு கொள்கையை (Tamil Nadu State Policy for Care of Homeless persons with Mental illness and Implementation Framework) வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் . பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் . நா. முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு. ஜெ. சங்குமணி ஆகியோர் உடனிருந்தனர்.

# தினசரி பால் கொள்முதலை உயர்த்த நடவடிக்கை !

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அனைத்து மாவட்ட பொது மேலாளர்களுக்கு அறிவுறுத்தினார்

*சென்னை, பிப். 28 -*

சென்னை, நந்தனம் ஆவின் இல்லத்தில் நேற்று (27.02.2025) பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் தலைமையில் அனைத்து மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள பொது மேலாளர்கள் மற்றும் இணையத்தில் உள்ள அனைத்து துறைத் தலைவர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.



பால்வளத்துறை இயக்குநர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள், அனைவரையும் வரவேற்று ஆய்வுக்கூட்டத்தில் ஆய்வு பொருளை எடுத்துரைத்து பால்வளத்துறை அமைச்சர் அவர்களை ஆய்வு செய்திட கேட்டுக்கொண்டார்கள்.

அரசு செயலாளர் அவர்கள், கோடைகாலத்தில் ஆவின் பால் மற்றும் பால் உபப் பொருட்களான தயிர், மோர், லஸ்ஸி மற்றும் ஐஸ்கீரிம் விற்பனையை அதிகரிக்கவும் பொது மக்களுக்கு எளிதாக கிடைத்திட வழிவகை செய்யவும், பால் கொள்முதலை அதிகரிக்கவும் கூறினார்.

பால்வளத்துறை அமைச்சர் “ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஆவின் நிறுவனம் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார். மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் வாரியாக பொது மேலாளர்களிடம் ஒன்றியங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். துணை பதிவாளர் (பால்வளம்) மற்றும் ஆவின் பொது மேலாளர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பால் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து பால் கொள்முதலை அதிகரிக்கவும், ஒன்றியங்களில் தற்போதுள்ள தினசரி பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனையினை ரூ.1.50 கோடியாக உயர்த்தவும் அறிவுறுத்தினார்.

மேலும் கோடைகாலத்தில் ஐஸ்கிரீம், தயிர், மோர், லஸ்ஸி ஆகிய பால் உபபொருட்களின் விற்பனையை உயர்த்தவும், நெய் விற்பனையை அதிகரிக்கவும் ஒன்றியங்கள் இலாபத்தில் செயல்படவும் பொது மேலாளர்கள் அர்பணிப்புடன் செயல்பட வேண்டும் என அறிவுரை வழங்கினார். அனைத்து ஒன்றியங்கள் மற்றும் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களில் பால் பரிசோதனைக் கருவிகள் நிறுவப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்றும், மாவட்ட ஒன்றியம் / பால் குளிரூட்டும் நிலையங்களிலிருந்து மொத்த பால் குளிர்விப்பு மையங்கள் (BMC) மற்றும் தொடக்கப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பாலின் அளவு மற்றும் தரம் குறித்த உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்கவும், சங்க உறுப்பினர்களுக்கு 10 நாட்களுக்குள் பால் பணம் பட்டுவாடா நிலுவையின்றி செலுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு வழங்கும் ரூ.3/ ஊக்கத்தொகையினை பால் உற்பத்தியாளர்களின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**கருணை அடிப்படையில் பணிநியமனம்**

மிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் ஆவின் நிறுவனத்தில் பணிபுரிந்த காலத்தில் காலமான பணியாளர்களின் சட்டப்பூர்வமான வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் வழங்கப்படும் முதுநிலை தொழிற்சாலை உதவியாளர் பதவிக்கான பணி நியமன ஆணையானது 4 நபர்களுக்கு (3 ஆண்கள் மற்றும் 1 பெண்) பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசுச் செயலாளர், மருத்துவர் ந.சுப்பையன், பால்வளத் துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆ. அண்ணாதுரை, இணை நிருவாக இயக்குநர் திருமதி. க. பொற்கொடி காவல்துறை இயக்குநர் மற்றும் முதன்மை விழிப்புக்குழு அதிகாரி ராஜீவ் குமார், பொது மேலாளர் (நிருவாகம்), அவர்கள் மற்றும் இணையத்தில் உள்ள அனைத்து துறைத் தலைவர்கள், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அயப்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.மா.துரை வீரமணி ஏற்பாட்டில் அயப்பாக்கம் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கழகப் பொருளாளர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு 2500 பள்ளி மாணவ மாணவச் செல்வங்களுக்கு எழுதும் உபகரணங்கள் மற்றும் அறுசுவை உணவு வழங்கினார். இதில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தலைமை ஆசிரியர்கள் சி.கருணாகரன், பி.கீதா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.







# தி.மு.க.

# இளைஞர் அணி



## தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், மருத்துவம் மற்றும் கல்வி உதவித் தொகையாக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் **ரூ.6,25,000/–** வழங்கினார்.

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை மாதந்தோறும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

அந்த வகையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்றதில் இருந்து, கழக நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டு, கல்வி, மருத்துவம் மற்றும் கழக முன்னோடிகளுக்கான நிதி உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

பொதுமக்களைச் சந்திக்கும்போது பெறப்படும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வு செய்து நிதி உதவிகளை வழங்கி வருகிறார், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின். பிப்ரவரி மாதத்திற்கான நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு:

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | மு.சுருளியப்பன், 186, கரியக்கம்மாள் கோயில் தெரு, புலிக்குத்தி, உத்தமபாளையம், தேனி – 625 524 |
| 2. | அ. சஹானா நஸீரின், த/பெ. அக்பர் அலி, ரோட்டுத் தெரு, சாத்துக்குடல் மேல்பாதி, விருதாச்சலம் வட்டம், கடலூர் – 606 001 |
| 3. | ரா.காவியா, த/பெ. ராமலிங்கம், காளியம்மன் கோவில் தெரு, தீவம்பாள்பட்டினம், தலைக்காடு (அ), திருத்துறைப்பூண்டி தாலுகா, திருவாரூர் – 614 711 |
| 4. | க.பவானி, க/பெ. டில்லிபாபு, 241, கிருஷ்ணன் தெரு, பிள்ளையார்பாளையம், காஞ்சிபுரம் – 631 501 |
| 5. | ஜெ.ராஜன், த/பெ. ஜெயராமன், 15/8, பஜனை மட சன்னதித் தெரு, வீரவநல்லூர், திருநெல்வேலி – 627 426 |
| 6. | சீ.உதயநிதி, த/பெ. சீனிவாசன், நீலகண்டராயன்பேட்டை கிராமம், அம்மூர் வழி, சோளிங்கர், இராணிப்பேட்டை – 632 501 |
| 7. | சே.பர்ஜானா, த/பெ. சேக் மைதீன், 7/58, 7–வது தெரு, வனத்துறைக் குடியிருப்பு, பெரும்பாக்கம், சென்னை – 600 100 |
| 8. | ஏ.எஸ்.அபிராமி, 130, அயக்கோட்டுவிளை, புத்தன்சந்தை, இடைக்கோடு, விளவங்கோடு, கன்னியாகுமரி – 629 152 |
| 9. | தி.ஹனீஷ், த/பெ. தினேஷ்குமார், 429/357, நாடார் தெரு, சாணார்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் – 637 211 |
| 10. | தி.நிவேந்தன், த/பெ. திருநாவுக்கரசர், 8/11, தோட்டக்கார மட தெரு, திருத்தணி, திருவள்ளூர் – 631 209 |
| 11. | என்.ஜி.ஏகாம்பரம், த/பெ. என்.வி.கணபதி, 11–3–61–சி, நடுத்தெரு, சிந்தலப்பட்டடை, நகரி மண்டலம், சித்தூர், ஆந்திர மாநிலம் – 517 590 |
| 12. | சசிரேகா, க/பெ. பாலசந்திரன், 14, கொண்டசாமி லே அவுட், மசக்காளிப்பாளையம், பீளமேடு, கோயம்புத்தூர் – 641 004 |
| 13. | சே.ராபின்சன், த/பெ. சேவியர், 186–ஏ, செபஸ்தியார்புரம், கார்க்கமலம், மணலூர் (அ), மணமேல்குடி தாலுகா, புதுக்கோட்டை – 614 620 |
| 14. | அ.டார்வின் பால், த/பெ. அருண், 11/6, மங்களபுரம் 4–வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை – 600 031 |
| 15. | பூ.பழ.தனேந்திரன், த/பெ. பழனியப்பன், பூதநத்தம் (கி), மெணசி அஞ்சல், பாப்பிரெட்டிப்பட்டி தாலுகா, தருமபுரி – 636 904 |
| 16. | புண்ணியகோடி, த/பெ. அமிர்தம், 1/17, கோவிந்தசேரி, பாணாவரம் (அ), சோளிங்கர், வாலாஜா தாலுகா, இராணிப்பேட்டை – 632 505 |
| 17. | சு.முத்துகிருஷ்ண பெருமாள், த/பெ. சுப்பு கோனார், 17/197, அம்மன் கோயில் தெரு, தச்சன்விளை, அரசூர் ஊராட்சி, சாத்தான்குளம் வட்டம், தூத்துக்குடி – 628 656 |
| 18. | ச.சர்வஜித், த/பெ. சங்கர்குமார், 1/680, சிவசக்தி நகர், பாம்பன், இராமநாதபுரம் – 623 521 |
| 19. | நா.சேதுநாதன், த/பெ. நாராயணன், சிக்களூர் (அ), அரூர் வட்டம், தருமபுரி – 636 906 |
| 20. | த.அஜித், த/பெ. தவமணி, 8, மோட்டூர் கிராமம், சிறுவாக்கம், வாலாஜாபாத், காஞ்சிபுரம் – 631 552 |
| 21. | பா.ரமேஷ், த/பெ. பாலகிருஷ்ணன், 75/12, வீரமுத்துத் தெரு, தெற்கு உடையார்பாளையம், ஆத்தூர், சேலம் – 636 102 |
| 22. | ப.சுஜிதா, த/பெ. பழனி, 2721, புகழேந்தி சாலை, கிருஷ்ணாபுரம், மருத்துவக் கல்லூரி சாலை, தஞ்சாவூர் – 613 004 |
| 23. | சங்கரநாராயணன், த/பெ. லட்சுமணன், 45/10, அண்ணா நகர், சித்தாப்புதூர் அஞ்சல், கோயம்புத்தூர் – 641 044 |
| 24. | கி.வசந்தா, க/பெ. கிருஷ்ணன், 6, பண்டரிநாதபுரம், பீமநகர், திருச்சி – 620 001 |
| 25. | சு.அபிராமி, க/பெ. சுரேஷ் முத்துசாமி (லேட்), கிழக்குத் தெரு, அணைக்கரைப்பட்டி, ஆண்டிப்பட்டி வட்டம், தேனி – 625 531 |

**“அன்பகம்”**
சென்னை – 18.
நாள் : 27–02–2025.